MCOP.No. 101/2023
Date : 19.06.2025
Witness Name & Rank – மதன்குமார் – PW1

சாட்சி அழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. நான் ஓட்டி சென்ற வாகனம் அசோக் லைலாண்ட் தோஸ்த் வாகனம் என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு விபத்து சமயத்தில் உரிய காப்பீடு இல்லை என்றால் சரிதான். எனக்கு காப்பீடு இல்லாத வாகனத்தை சாலையில் ஓட்டி செல்லக்கூடாது என்று தெரியும் என்றால் சரிதான். மேற்படி வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் எனது அப்பாவுடைய வாகனமாகும் நான் தான் உரிய காப்பீடு இல்லாத வாகனத்தை சாலை விதிகளுக்கு முரணாக எனது கவனக்குறைவால் ஓட்டிச் சென்றதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல நான் எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் கோவை முத்தூாஸ் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் கடைசியாக மருத்துவ சிகிச்சைக்கு எப்போது சென்றேன் என்றால் 1 ½ ஆண்டுகளுக்கு முன்பு சென்றேன் எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்கள் பூரண குணமாகிவிட்டதால் தான்
2. நான் தொடர் சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல நான் தற்போது என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் எந்த வேலைக்கும் செல்வதில்லை. விபத்து சமயத்தில் நான் ஓட்டுநராக வேலை பார்த்து வந்ததாகவும் அதனால் எனக்கு வருமான இழப்பு ஏற்பட்டதாகவும் சொல்லி உள்ளது வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றும் அப்போதும் நான் இதே போல் சும்மாதான் இருந்தேன் என்றால் சரியல்ல எனக்கு விபத்தில் நிரந்தர ஊனம் என சொல்லி உள்ளது இழப்பீடு வழக்குக்காக பொய் சங்கதி என்றால் சரியல்ல எனது கவனக்குறைவால் விபத்து நடந்துள்ளதால் 2 வது எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல இழப்பீடு தொகை அதிகமான தொகை என்றால் சரியல்ல எனவே எனது மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.